பக்கங்கள்: 07

# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு


சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 23 வியாழக்கிழமை 07.07.2022 கதிர் 135

## கடவுச்சீட்டு வரிசையில் காத்திருந்த பெண் குழந்தை பிரசவித்தார்



கடவுச்சீட்டுக்காக வரிசையில் காத்திருந்த கர்ப்பிணித் தாய் ஒருவர் இன்று அதிகாலை குழந்தையைப் பிரசவித்துள்ளார். ☞2

## குடும்பஸ்தர் வெட்டிக்கொலை



மட்டக்களப்பு - சந்திவெளிப் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் கொடூரமாக வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

அவரது உறவினர்களால் நேற்றிரவு குறித்த நபர் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். சந்திவெளி பிரதான வீதியைச் ☞2

# எரிபொருள் வரிசையில் காத்திருந்த மேலும் இருவர் பரிதாப உயிரிழப்பு!

### - இதுவரை 16 பேர் அவலச் சாவு



பம்பலப்பிட்டி மற்றும் பயாகல பகுதிகளில் எரிபொருளுக்காக வரிசைகளில் காத்திருந்த வயோதிபர்கள் இருவர் உயிரிழந்துள்ளனர்.

பம்பலப்பிட்டிஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்துக்குச் சென்ற 60 வயதான ஒருவர் திடீரென சுகவீனமுற்று கொழும்பு தேசிய வைத்தியசாலையில் நேற்றிரவு சேர்க்கப்பட்டார். குறித்த நபர் இன்று அதிகாலை உயிரிழந்தார் என்று பொலிஸார் கூறினர்.

புத்தளம் - மதுரங்குளி பகுதியைச் சேர்ந்த குறித்த நபர், இராஜகிரிய - ஒபேசேகரபுர பகுதியிலுள்ள தமது மகளுடன் வசித்து வந்த நிலையில், நேற்றிரவு எரிபொருள் பெற்றுக்கொள்வதற்காகச் சென்றுள்ளார்.

இவரின் ஜனாஸா கொழும்பு தேசிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், வெலிக்கடைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

இதேவேளை, பயாகல பகுதியில் எரிபொருள் வரிசையில் காத்திருந்த 63 வயதான ☞2

# மக்கள் போராட்டத்தை ஒடுக்க மீண்டும் அவசரகாலச் சட்டம்?

### கமல், லியனகேவுடன் கோட்டா மந்திராலோசனை





ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை உடனடியாகப் பதவி விலகக் கோரி நாளை மறுதினம் நடத்தப்படவுள்ள மக்கள்போராட்டத்தை ஒடுக்குவதற்காக ☞2



## இலங்கையின் நெருக்கடி நிலை சர்வதேச மட்டத்தில் முன்னிலை

### 'த வொஷிங்டன் போஸ்ட்' தெரிவிப்பு

The Washington Post

உக்ரைன் போர் இன்னும் சர்வதேச தலைப்புச் செய்திகளில் ஆதிக்கம் செலுத்தலாம். எனினும், போர்க்களத்திலிருந்து வெகு தொலைவில் உள்ள நாடான இலங்கையின் நெருக்கடி நிலை இன்று முக்கிய செய்தியாக மாறியுள்ளது என 'த வொஷிங்டன் போஸ்ட்' தெரிவித்துள்ளது.

பல மாதங்களாக, இலங்கை. பொருளாதார மரணச் சுழலில் உள்ளது.

கடன் நெருக்கடி, முதலில் தொற்றுநோய்களின் அதிகரிப்பு மற்றும் பின்னர் உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு ☞2

## கோட்டாபயவுக்காக மக்களை பட்டினியால் சாகடிக்க முடியாது

### அவர் உடன் பதவி விலக வேண்டும் என்று ரிஷாத் எம்.பி. வலியுறுத்து



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக மக்களைப் பட்டினியால் சாகடிக்க முடியாது. மக்களைத் தொடர்ந்தும் துன்பத்துக்கு ஆளாக்க முடியாது. இந்த மோசமான யுகம் மாற வேண்டுமாக இருந்தால், கோட்டாபய உடனடியாகப் பதவி விலக வேண்டும். அதைவிட வேறு எந்த முடிவுகளும் இந்த நாட்டுக்கு எந்த விடிவையும் தரப்போவதில்லை.

- இவ்வாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ☞2

## பல்கலை மாணவர்களுக்கான தொல்லியல்சார் பயிற்சி நிகழ்வு



(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்களுக்கான தொல்லியல்சார் தொழில்நுட்பங்கள் தொடர்பான பயிற்சி வழங்கும் நிகழ்வு இன்று நடைபெற்றது. ☞2

## ஹாட்லி மாணவனின் புதிய கண்டுபிடிப்பு



யாழ்., வடமராட்சி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி (தேசிய பாடசாலை) மாணவன் செல்வச்சந்திரன் ஸ்ரீமன் கலப்பு வகையில் சைக்கிள் ஒன்றை அறிமுகம் செய்துள்ளார்.

இன்றைய எரிபொருள் நெருக்கடிக்குத் தீர்வாகப் போக்குவரத்தை இலகுபடுத்தும் நோக்குடன் சாதாரண சைக்கிளைப் பற்றரியின் துணையோடு இயங்கவைக்கும் ஹைபிரிட் சைக்கிளாக அவர் மாற்றியுள்ளார்.

இந்தக் கண்டுபிடிப்புக்காக மீள் சுழற்சிப் பொருள்களையும் அவர் பயன்படுத்தியுள்ளார்.

இதனை அறிமுகம் செய்யும் நிகழ்வு நேற்று ☞2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## கோட்டாபயவுக்காக மக்களை .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினரு மான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரை யாற்றிய அவர் மேலும் கூறியதாவது:-

இந்த அமர்விலே ஆளுங்கட்சி உறுப்பி னர்கள்கூட நாட்டின் மோசமான நிலையை, அரசாங்கம் விட்ட தவறுகளை சுட்டிக் காட்டாக்கூடியவர்களாக இருக்கின்றனர். அவ்வாறு சுட்டிக்காட்டுபவர்களிடம், ஏன் நீங்கள் எல்லோரும் சேர்ந்து, நாட்டைக் குட்டிச்சுவராக்கிய ஜனாதிபதியை வீட்டுக் குச் செல்ல வேண்டுமென கோர முடி யாது? எனக் கேட்க விரும்புகின்றேன். ஒரு தனி நபர் ஆட்சிக் கதிரையில் அமர வேண்டும் என்பதற்காக, இன்று நாட்டில் உள்ள பல இலட்சக்கணக்கான மக்கள் பாதையோரங்களில் படுகின்ற அவஸ்தை களையும் அவலங்களையும் கண்டு வேதனை அடைகின்றோம். நேற்றுக்கூட பொரளையில் ஒருவர் பெற்றோல் வரிசை யில் மரணித்திருக்கின்றார். ஒரு இளை ஞர் ரயிலில் பயணிக்கும்போது மரணித் துள்ளார். ஒருதாய் பச்சிளங்குழந்தையோடு பஸ்ஸில் ஏறுவதற்காக வெயிலிலே நிற்பதை ஊடகங்கள் வாயி லாக நாம் கண்டோம்.

இதேபோன்று, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் உள்ள மக்கள் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தமது அவலங்களைக் கொட்டு கின்றனர். எரிபொருளுக்காவும், எரிவாயு வுக்காகவும் பாதையிலே படுத்துறங்கி, அதனை பெற்றுக்கொள்ள வேண்டுமென தவிக்கின்றனர். குறிப்பாக, அந்தப் பிர தேசத்தில் உள்ள கடற்றொழிலாளர்கள் மீன்பிடிக்கச் செல்ல மண்ணெண்ணெய் இல்லாத அவலம் ஏற்பட்டுள்ளது. அவர்க ளுடைய தொழில் முற்றாக நாசமாகி யுள்ளது. அவர்கள் எல்லோருமே இப் பொழுது சீரழிக்கப்பட்டுள்ளார்கள்.

ஜனாதிபதி எடுத்த தவறான முடிவின் காரணமாக பெரும்போக பயிர்ச்செய்கை முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது. 20 லட்சம் விவசாயக் குடும்பங்கள், ஒரு லட்சம் மக் கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர். மக் கள் பஞ்சத்தின் விளிம்பில் நின்றுகொண்டி ருக்கின்றனர். ஒருவேளைதானும் சாப்பிட முடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. தற்போது புதிதாக நியமிக்கப்பட்டுள்ள விவசாய அமைச்சர் சிறுபோகத்துக்கு உரம் வழங்குவோம் எனக் கூறுகின்றார். ஆனால், இற்றைவரை எதுவுமே நடை பெறவில்லை. உரம் இன்னும் நாட்டுக்கு வந்து சேரவில்லை என அவர் நாடாளு மன்றில் இன்று கூறுகின்றார். இந்த அர சாங்கம் திட்டமிடல் இல்லாது இயங்கு கின்றது.

நாட்டின் ஜனாதிபதி இரக்க சிந்தனை உள்ளவராக இருந்தால், இந்தக் கஷ்டங் களை எல்லாம் உணராமல் இருக்க முடியாதே! தமது உறவினர்கள் இவ்வாறு குழந்தைகளுடன் பாதைகளில் நின்று அவஸ்தைப்படுவதை ஜனாதிபதி பார்த் துக்கொண்டு நிம்மதியாக இருப்பாரா? என்று நான் அவரிடம் கேட்கின்றேன். அவர் மீது பாசம்கொண்டு வாக்களித்த 69 இலட்சம் மக்கள் மீது அணுவளவு கூட இரக்கம் இல்லாத ஜனாதிபதியாக அவர் இருக்கின்றார். அவர் உண்மை யாகவே மக்கள் மீது இரக்கம் கொண்டி ருப்பாரேயானால், ஒரு நிமிடம் கூட இந்த ஆசனத்தில் இருக்க முடியாது. அவருக்கு மனச்சாட்சியும் இல்லை, மக்கள் மீது இரக்கமும் இல்லை என்பதையே அவரது தொடர்ந்தேர்ச்சியான செயற்பாடுகளும் நடவடிக்கைகளும் புலப்படுத்துகின்றன.

தற்போதைய காலகட்டத்தில், நாடாளு மன்றத்தில் உள்ள 225 உறுப்பினர்க ளும் ஒன்றுபட வேண்டிய தேவை ஏற் பட்டுள்ளது. ஜனாதிபதியால் இந்த நாட்டை தொடர்ந்தும் முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல முடியாது என்பதையும், நிருவாகத்தை முன்னெடுத்து செல்ல முடியாது என்பதையும் அவர் நிரூபித்து விட்டார். எனவே, அவரை பாதுகாக்க வேண்டும் என்பதற்காக மக்களை பட்டி னியால் சாகடிக்க முடியாது. மக்களைத் தொடர்ந்தும் துன்பத்துக்கு ஆளாக்க முடியாது.

மீனவச் சமூகம், விவசாயச் சமூகம், நகர்ப்புற, கிராமப்புற மக்கள் அனைவ ருமே தற்போது கஷ்டத்தில் விழுந்துள்ள னர். சிலர் அதிக விலைக்கு எரிபொருள் களை திருட்டுத்தனமாக விற்கின்றனர். இவ்வாறு மிக மோசமான, கீழ்நிலையான ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கின் றது. அங்குமிங்குமாக உள்ள மக்கள் பிரதிநிதிகளை திருட்டுத்தனமாகப் பிடித்து ஆட்சியை கொண்டு செல்கின்றனர். எனவே, 225 நாடாளுமன்ற உறுப்பினர் களும் ஒன்றுபட்டு ஜனாதிபதியை வீட்டுக் குச் செல்லுமாறு வலியுறுத்த வேண் டும். லக்ஷ்மன் கிரியெல்ல, தினேஷ் குண வர்தன போன்ற மூத்தவர்கள் இந்த நாடா ளுமன்றில் இருக்கின்றனர். எல்லோரும் ஒன்றுபட்டு சிறந்த ஜனாதிபதி ஒருவரை தெரிவுசெய்யுங்கள். சகல கட்சிகளையும் சேர்த்து அரசொன்றை நிறுவுங்கள். திட் டமிட்டு செயலாற்றுங்கள். மக்கள் படும் கஷ்டங்களை எவ்வாறு போக்க முடியும்? என்று திட்டமிடுங்கள். அதைவிடுத்து, ஜனாதிபதியைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக, நீங்கள் அவருக்குவக்காளத்து வாங்கிக்கொண்டிருந்தால் நாடு தொடர்ந் தும் சீரழியும்.

அத்துடன், ஜனாதிபதியுடன் கதைக்கக் கூடிய, துணிவிருக்கக் கூடிய எவராவது சென்று நீங்கள் பெயில் எனவும் உங்களால் தொடர்ந்தும் இந்த பயணத்தைத் தொடர முடியாது எனக் கூறி, அவருக்கு உண்மை யான நிலவரத்தை உணர்த்துங்கள். இவ்வாறு நீங்கள் கூறத் தயாராகவில்லை என்றால், இறைவனிடத்தில் நீங்கள் பதில் சொல்லியே ஆக வேண்டும்.

இந்த ஜனாதிபதியின் பிழையான நிர் வாகம், முகாமைத்துவம், தவறான வழி காட்டல்களால்தான் நாடு இவ்வளவு மோசமடையக் காரணம் என்பதை நீங் கள் உணர்ந்துகொள்ளுங்கள். மஹிந்த ராஜபக்ஷவை வெளியேறுங்கள் என்று கூறி மக்கள் நாடு முழுவதிலும் இறங்கிப் போராடவில்லை. கோட்டாதான் வீட்டுக்குப் போக வேண்டுமென மக்கள் போராடு கின்றனர். இன்று வரை அதைத்தான் கூறுகின்றனர். ஆனால், ஜனாதிபதி கோட்டா, தான் வெளியேறாமல் முன்னாள் பிரதமர் மஹிந்தவை துரத்திவிட்டு, தான் தொடர்ந்தும் ஆட்சிக் கதிரையில் இருப்ப தற்காக இந்த விளையாட்டுக்களை மேற் கொண்டு வருகின்றமையை, நாட்டு மக் கள் மட்டுமின்றி உலகமே பார்த்து வேத னைப்படுகின்றது.

எனவே, இந்த மோசமான யுகம் மாற வேண்டுமாக இருந்தால், கோட்டாபய உடனடியாகப் பதவி விலக வேண்டும். அதைவிட வேறு எந்த முடிவுகளும் இந்த நாட்டுக்கு எந்த விடிவையும் தரப்போவ தில்லை. அதேபோன்று, நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு, ஜனாதிபதி கோட்டா வெளியேற வேண்டுமென்ற கோத்தை முன்வைத்து கோரிக்கை விடுக்க வேண்டுமென்று வேண்டுகின் றேன் - என்றார்.

## பல்கலை ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யாழ். கோட்டையில் காலை 9 மணிக்கு ஆரம்பமான இந்த நிகழ்வில் தொல்லி யல்சார் தொழில்நுட்பங்கள் தொடர்பாக மாணவர்களுக்கு விளக்கமளிக்கப்பட் டது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத்தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன், வடக்கு மாகாண உள் ளூராட்சி அமைச்சின் செயலாளர் இளங் கோவன், தொல்லியல்துறை விரிவுரை யாளர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## ஹாட்லி மாணவனின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஹாட்லிக் கல்லூரி ஆய்வுகூட மண்டபத் தில் நடைபெற்றது.

ஹாட்லிக் கல்லூரியின் இளம் கண்டு பிடிப்பாளர் கழகத்தின் தலைவர் இராஜ. அரவிந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், கல்லூரி அதிபர் தம்பையா கலைச்செல்வன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

இதில் கல்லூரி உப அதிபர், ஆசிரியர் கள், பழைய மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## இலங்கையின் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
காரணமாக இலங்கையின் நிலை தீவிரம டைந்துள்ளது.

உணவு, எரிபொருள், சமையல் எரி வாயு, மருந்துகள் ஆகியவற்றில் பற்றாக் குறை ஏற்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் கணக்கெடுப்பில், இலங்கையில் 70 சதவீத குடும்பங்கள் உணவு நுகர்வை குறைத்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

உணவு விலை பணவீக்கம் சுமார் 57 சதவீதமாக உள்ளது.

பெருகிவரும் பொதுமக்களின் கோபம் மற்றும் எதிர்ப்புக்கள் கடந்த மே மாதம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் அரசை வீழ்த்தியது.

எனினும், நெருக்கடி நிலைமைகள் நீடித்தன. அத்துடன் பாதுகாப்புப் படையி னருக்கும் சாதாரண, கோபமடைந்த பொதுமக்களுக்கும் இடையில் புதிய மோதல்களின் சாத்தியக்கூறுகள் பற்றிய அச்சங்கள் அதிகரித்து வருகின்றன.

இலங்கையில் பாடசாலைகள் மற்றும் அலுவலகங்கள் குறைந்தது வாரம் முழு வதும் மூடப்பட்டுள்ளன.

கடந்த வாரம், தலைநகர் கொழும்பில் வைத்தியர்கள், வைத்திய ஊழியர்கள், ஆசிரியர்கள் மற்றும் வங்கியாளர்கள் அத்தியாவசியப் பணிகளை மேற்கொள் வதற்குத் தேவையான பெற்றோல் அல் லது டீசலைப் பெற்றுக்கொள்ள இயலா மைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட் டத்தில் ஈடுபட்டனர்.

சுதந்திர நாடான பின்னர் வரலாற்றில் முதல் தடவையாக இலங்கை மே மாதம் கடனைத் திருப்பிச் செலுத்தவில்லை.

புத்திசாலித்தனமான மூத்த அரசியல் வாதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலை மையிலான ஒரு இடைக்கால அரசு, பிராந்திய வல்லரசுகளான இந்தியா மற் றும் சீனாவிடம் இருந்து உதவி கோருவது உட்பட நாட்டைப் பிரச்சினைகளில் இருந்து வெளியேற்ற முயற்சிக்கின்றது.

எனினும், இறக்குமதிக்குப் பணம் செலுத்த முடியாத பாதை இருண்டதாகவே உள்ளது.

கடவுச்சீட்டு அலுவலகங்களில் வரிசை கள் இப்போது நீளமாக உள்ளன.

மிகவும் அவநம்பிக்கையானவர்கள் இந்தியா போன்ற அருகிலுள்ள நாடுகளுக்கு படகு வழியாக தப்பிச் செல்ல முயற்சிக் கின்றனர்.

இலங்கைப் பொருளாதாரத்தின் அழிவை ஆய்வாளர்கள், 1990களின் பிற்பகுதியில் தென்கிழக்கு ஆசியாவின் முக்கியப் பொருளாதாரங்களில் ஏற்பட்ட நிதிக் குழப்பத்துடன் ஒப்பிட்டுள்ளனர்.

தெற்காசியாவின் லெபனானாகக் கட னில் சிக்கி, செயலிழந்த நாடாக, இலங்கை மாறும் என்றும் ஏனையவர்கள் எச்சரிக் கின்றனர்.

நாட்டின் இடைக்கால அரசுக்கும் சர்வ தேச நாணய நிதியத்தின் அதிகாரிகளுக் கும் இடையில் ஒரு சாத்தியமான நிதிய ளிப்பு தொடர்பாக கடந்த ஜூன் 20 அன்று ஆரம்பித்த பத்து நாள் பேச்சுகள் எந்தத் தீர்மானமும் இல்லாமல் கடந்த வாரம் முடிவடைந்தன. - என்றும் 'த வொஷிங் டன் போஸ்ட்' -குறிப்பிட்டுள்ளது.

## கடவுச்சீட்டு ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொழும்பு - பத்தரமுல்லையில் உள்ள குடிவரவு, குடியகல்வு காரியாலயத்துக்கு முன்பாக வரிசையில் கடவுச்சீட்டு பெறு வதற்காகக் குறித்த பெண் வரிசையில் காத்திருந்துள்ளார்.

அதன்போது பிரசவ வலியால் துடித்த கர்ப்பிணிப் பெண்ணைப் பார்த்த இராணுவத்தினர், அவரை உடனே வைத்தியசாலையில் சேர்க்க ஏற்பாடு செய்தனர். எனினும், இராணுவத்தி னரால் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லும் வழியில் அவர் குழந்தையைப் பிரசவித்தார் என்று தெரியவந்துள்ளது.

ஹற்றன் பகுதியைச் சேர்ந்த 26 வயதான பெண்ணே குழந்தையைப் பிரசவித்துள்ளார். தாயும், குழந்தையும் பொரளை - காசல்வீதி பெண்கள் வைத்தி யசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும், இருவரும் நலமுடன் இருக்கின் றனர் எனவும் வைத்தியர்கள் தெரிவித் துள்ளனர்.

## எரிபொருள் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஒருவர் உயிரிழந்துள்ளார். எரிபொருள் வரிசையில் காத்திருந்தபோது திடீர் சுகவீனமுற்ற நிலையில் களுத்துறை -நாகொட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இவர், இன்று அதிகாலை உயிரிழந்தார்.

இந்த இரு மரணங்களுடன் எரி பொருள் வரிசைகளில் பதிவாகிய மரணங்களின் எண்ணிக்கை 16 ஆக அதிகரித்துள்ளது.

## குடும்பஸ்தர் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சேர்ந்த 38 வயதான கந்தசாமி இளையராஜா என்பவரே வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

நீதிவான் விசாரணைகளின் பின்னர் சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தி யசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

குறித்த நபரைத் தாக்கியபோது காயமடைந்த மூவர் கைது செய்யப்பட்டு மட்டக்களப்பு போதனா வைத்தியசா லையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் கூறினர்.

2 ஆண்களும், பெண் ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொலை செய்யப்பட்டவரின் மனைவி யின் உறவினர்களே கைது செய் யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் சந்திவெளி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மக்கள் போராட்ட .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாடு முழுவதும் அவசரகாலச் சட்டத்தை மீண்டும் அமுல்படுத்துவது தொடர்பில் அரச உயர்மட்டத்தால் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது என அறிய முடிகின்றது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமல் குணரத்ன, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் எச்.எல்.வி.எம். லியனகே உள்ளிட்டோருடன் ஜனாதி பதி தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் இந்த விடயம் கலந்துரையாடப்பட்டது எனத் தகவல் கள் வெளியாகியுள்ளன.

இந்தக் கலந்துரையாடலில் இறுதித் தீர்மானம் இன்னும் எடுக்கப்படாத போதிலும், எதிர்வரும் 9ஆம் திகதிக்கு முன்னர் அவசரகாலச் சட்டத்தை அமுல் படுத்துவதற்கான அதிக சாத்தி யக்கூறுகள் காணப்படுகின்றன என்று தெரியவருகின்றது.

செய்தித் தொடர்புக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## மட்டு. மேயரின் முயற்சி

எரிபொருள் தட்டுப்பாட்டால் மக்களின் தனிப்பட்ட போக்குவரத்து வசதிகள் முடக்கப்பட்டுள்ளன. அதனால் மக்கள் ஒரேயடியாகப் பொதுப் போக்குவரத்தை நாட வேண்டிய நிலைமை.

பொதுப் போக்குவரத்தும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே முன்னெடுக்கப்படுகின்றமையினால் அவற்றிலும் அதிக நெருக்கடி. பஸ்களிலும் ரயில்களிலும் மக்கள் தொங்கிக் கொண்டு செல்லும் ஆபத்து நிலைமை. அதனால் பேரனத்தங்கள் நிகழக்கூடிய வாய்ப்புகள் அதிகம் உண்டு.

பொருளாதார நெருக்கடியால் மருத்துவ வசதிகளும் பாதிப்புற்ற நிலையில் அத்தகைய அனர்த்தம் ஏற்பட்டால் அதன் விளைவுகள் எதிர்கொள்ள முடியாத அவஸ்தையைத் தரலாம். ஆகவே மிகுந்த முன்னெச்சரிக்கையுடன் திட்டமிட்டு செயல்பட வேண்டும், வரமுன் காப்போம் என்று நேற்று இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தோம்.

பஸ்களில், ரயில்களில் அதிக பயணிகளை ஏற்றி செல்லாதீர்கள் என சாரதிகளுக்கோ, ரயில் நிலைய அதிபர்களுக்கோ வெறுமனே எழுத்தில் உத்தரவு கொடுப்பதால் மட்டும் பயனில்லை. அதையும் தாண்டி, காத்திரமாக, பலன் தரும் விதத்தில், சாத்தியமான முறையில் ஏதாவது செய்யுங்கள் என்று குறிப்பிட்டிருந்தோம்.

இந்த விடயத்தில் மட்டக்களப்பு மாநகர மேயர் தியாகராஜா சரவணபவன் காத்திரமான – முன்மாதிரியான – நடவடிக்கையை நேரம் அறிந்து முன்னெடுத்திருக்கின்றார்.

மட்டக்களப்பு நகரத்துக்குள் நடமாடக் கஷ்டப்படும் மக்களின் சிரமத்தைப் புரிந்து கொண்டு, நேரக் கிரமப்படி, தற்காலிகமாக குறுந்தூர பஸ் சேவை (City Shuttle Service) ஒன்றைத் தனியார் உதவியுடன் ஆரம்பிக்க அவர் முன் முயற்சி எடுத்து அறிவித்துள்ளார்.

ஒரு சுற்று வட்ட ஒழுங்கில், ஒரு குறிப்பிட்ட கால கிரமத்தில், இந்த பஸ் தொடர்ந்தும் சேவையில் இருக்கும். கட்டணமும் இயன்ற வரை குறைவாக அமையும்.

அது மாத்திரமல்ல, இந்தச் சேவையில் இருக்கும் பஸ்கள் எங்கே இருக்கின்றன, எப்போது, எந்த பாதையால் வரும் என மக்கள் அறியக்கூடியதாக ஒரு செயலியை உருவாக்கி, அதன் மூலம் மட்டக்களப்பு நகரவாசிகள் தமது கைத்தொலைபேசி மூலம் அதனை அறிந்து கொள்ளும் ஏற்பாட்டையும் அவர் முன்னெடுக்கின்றார்.

இந்த நெருக்கடி சமயத்தில் விஞ்ஞானத்தையும் பயன்படுத்திக் காத்திரமான ஓர் எத்தனத்தில் அவர் இறங்கி இருக்கின்றார். பாராட்டப்பட வேண்டிய சிந்தனை.

ஆனாலும் இந்த முயற்சியை அவர் வெற்றிகரமாகச் செயல்படுத்துவதற்குப் பல தடைகளை இன்னும் தாண்ட வேண்டி இருக்கும். குறிப்பாக அரசின் சிவப்பு நாடா சிக்கல் முக்கியமானதாக அமையும்.

இந்தச் சேவைக்கு கிழக்கு மாகாண வீதிப் பயணிகள் அதிகார சபைக்கு விண்ணப்பித்து, அனுமதிக்குக் காத்திருக்கின்றோம் என்ற அவரின் கூற்று, அவர் இந்த முயற்சியில் இன்னும் மலையைத் தாண்ட வேண்டி இருக்கும் என்ற மலைப்பைத்தான் தருகின்றது.

இலங்கையில் பஸ் சேவைக்கு அனுமதி என்றால் அது கையூட்டுப் பெறும் மாபியா விவகாரம் என்பது உலகறிந்த பரகசியம். இந்த நெருக்கடி சமயத்தில் அந்த இக்கட்டைத் தாண்டி, விரைந்து இந்த அனுமதி அவருக்கும் இந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கும் ஏனையோருக்கும் கிடைக்க வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திப்பதைத் தவிர, எமக்கு வேறு வழியில்லை.

தவிரவும் நகருக்குள் மக்களின் போக்குவரத்தை வைத்து சுளையாக லாபம் பிடுங்கும் பல தரப்புகள் உள்ளன. அவற்றின் எதிர்ப்புக்கும் அவர் முகம் கொடுக்க வேண்டி இருக்கும்.

எது எப்படியோ ஓர் உள்ளூராட்சி மன்றின் தலைவர், தனது பிரதேசத்துக்குள், தனது மக்களுக்கு, இந்த நெருக்கடி சமயத்தில் எப்படி உதவ முடியும், பணியாற்ற இயலும் என்பதற்கு இந்த முயற்சி நல்ல உதாரணம்.

## எரிபொருள்களின் விலை குறைவடைந்துள்ள நிலையில் 70 கோடி ரூபாவை மேலதிகமாக செலுத்துவது எதற்கு?

### ஹர்ஷ டி சில்வா கேள்வி



உலக சந்தையில் எரிபொருளின் விலை 10 சதவீதத்தால் குறைவடைந்துள்ள நிலையில் வருகை தரவுள்ள எரிபொருள் கப்பலுக்கு மேலதிகமாக 70 கோடி ரூபாவை செலுத்தவுள்ளமை எந்தளவிற்கு நியாயமானது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா சபையில் கேள்வியெழுப்பினார்.

சபாநாயகர் தலைமையில் நாடாளுமன்றம் புதன்கிழமை கூடிய போது எரிபொருள் மற்றும் எரிவாயு விநியோக கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள பாதிப்பு தொடர்பில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு–

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் அரச கடன் மறுசீரமைக்கப்பட்டு, நாட்டின் கடன் நிலைபேறான தன்மையில் காணப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. கடன் மறுசீரமைப்பிற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கத் தயாராகவுள்ளோம். எரிபொருள் மற்றும் எரிவாயு விநியோக கட்டமைப்பில் காணப்படும் சிக்கல் நிலைமை நாட்டின் பிரதான பிரச்சினையாகத் தீவிரமடைந்துள்ளது. எரிவாயு விநியோக கட்டமைப்பு தொடர்பில் ஆராய லிற்றோ நிறுவனத்தினர் கோப் குழுவிற்கு அழைக்கப்பட்டார்கள். எரிவாயு விநியோகத்தில் பல அடிப்படை சிக்கல் காணப்படுவதை கோப் குழுவில் அறிய முடிந்தது.

எரிவாயு கட்டமைப்பில் காணப்படும் சிக்கல் நிலை தொடர்பில் கோப் குழு அதிக அவதானம் செலுத்தியுள்ளது. குழுவால் முன்வைக்கப்படும் பரிந்துரைகளை செயற்படுத்த உரிய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. எரிபொருள் வரிசை பல கிலோமீற்றர் தூரத்துக்கு நீண்டு செல்கிறது.

உலக சந்தையில் எரிபொருளின் விலை 10 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது. 115 டொலராகக் காணப்பட்ட ஓர் எரிபொருள் தாங்கியின் விலை தற்போது 99 டொலர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

எரிபொருள் விலை குறைவடைந்துள்ள நிலையில் 70 கோடி ரூபாவை எரிபொருள் கப்பலுக்கு மேலதிகமாக செலுத்துவது எந்தளவிற்கு நியாயமானது. – என்றார்.

## சிங்கள மக்களுக்கு வெறும் பொருளாதார நெருக்கடி மட்டுமே தமிழர்களுக்கு அடக்குமுறையுடன் பொருளாதார நெருக்கடியும்

### கஜேந்திரன் எம்.பி. ஆவேசம்



சிங்கள மக்கள் நாட்டின் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர். எனினும் தமிழ் மக்கள் வழமையான அடக்குமுறைகளுடன் பொருளாதார நெருக்கடிகளையும் எதிர்கொள்கின்றனர் என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் நாடாளுமன்றில் தெரிவித்தார்.

இந்தநிலையில், முல்லைத்தீவு வட்டுவாகல் பகுதியில், சப்த கன்னிமார் ஆலய திருவிழா கடந்த 4 ஆம் திகதி ஆரம்பமாகவிருந்த நிலையில், அதனை படையினர் தடுத்துள்ளனர் என நாடாளுமன்ற உறுப்பினர் குற்றம் சுமத்தினார்.

ஏற்கனவே முன்னைய வருடங்களில், இந்த திருவிழாவுக்கு அனுமதி வழங்கப்பட்ட போதும், இந்த வருடத்திலேயே அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகக் கஜேந்திரன் குறிப்பிட்டார்.

கடற்றொழிலுக்கு வடக்கில் பல லட்சம் எரிபொருள் தேவை. எனினும் அதற்காக எரிபொருள்கள் வழங்கப்படவில்லை என்றும் கஜேந்திரன் குற்றம் சுமத்தினார்.

## இளைஞர்களின் பிரதிநிதித்துவத்தை 25 வீதம் அதிகரிப்பதற்கு சட்டமூலம்!

### சபைக்கு சமர்ப்பித்தார் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார்



நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் இடங்களில் இளைஞர்களின் குரல் இருக்கவேண்டும். அதற்காக அந்த இடங்களில் இளைஞர்களின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்படவேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (புதன் கிழமை) மூன்று சட்டமூலங்களை சமர்ப்பித்து உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்–

நாடாளுமன்றம், மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி சபைகளில் இளைஞர்களின் பிரதிநிதித்துவத்தை 25 வீதத்தால் அதிகரிக்கவேண்டும்.

ஏனெனில் நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் இடங்களில் இளைஞர்களின் குரல் இருக்கவேண்டும். அதற்காக அந்த இடங்களில் இளைஞர்களின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட வேண்டும்.

அத்துடன் தற்போது இளைஞர்களுக்கு 5 வீத ஒதுக்கீடே வழங்கப்படுகின்றது.

இது எந்தவகையிலும் போதுமானதாக இல்லை. அதனால்தான் இளைஞர்களின் பிரதிநிதித்துவத்தை 25 வீதமாக அதிகரிக்க வேண்டும் என்ற இந்த பிரேரணையை முன்வைக்கின்றேன்.

ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் பொறுப்பை இளைஞர்களுக்கு ஏற்படுத்த வேண்டும். ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் படித்த இளைஞர்களின் நம்பிக்கை இழப்பை மாற்ற இளைஞர் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கவேண்டும். – என்றார்.

இதன்போது அவர் 1981ஆம் ஆண்டின் முதலாம் இலக்க நாடாளுமன்ற தேர்தல் சட்டத்தை திருத்துவதற்கான சட்டமூலம், 1988ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க மாகாணசபை தேர்தல் சட்டத்தை திருத்துவதற்கான சட்டமூலம், 1946ஆம் ஆண்டின் 53ஆம் இலக்க உள்ளூராட்சி அதிகாரசபைகள் தேர்தல் கட்டளை சட்டத்தை திருத்துவதற்கான சட்டமூலம் என்பவற்றை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பித்தார்.

# இங்கிலாந்து அமைச்சர்கள் அடுத்தடுத்து ராஜினாமா போரிஸ் ஜான்சனுக்கு மீண்டும் நெருக்கடி நிலை



இங்கிலாந்தில் பிரதமர் போரிஸ் ஜான்சன் அமைச்சரவையில் 4 அமைச்சர்கள் தொடர்ந்து ராஜினாமா செய்துள்ளமையால், அவருக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இங்கிலாந்தில் போரிஸ் ஜான்சன் தலைமையிலான பழைமை வாத கட்சியின் துணை கொறடாவாக இருந்த எம்.பி. கிறிஸ் பின்சர், கடந்த புதன்கிழமை இரவு கேளிக்கை விடுதியில் 2 ஆண்களிடம் பாலியல் ரீதியில் அநாகரிகமாக நடந்து கொண்டார் என குற்றச்சாட்டு எழுந்தது. இதையடுத்து, அவர் தனது பதவியை ராஜினாமா செய்தார். கட்சியின் எம்.பி. பதவியில் இருந்தும் இடைநீக்கம் செய்யப்பட்டார்.

இந்நிலையில், நிதி அமைச்சர் ரிஷி சுனக், சுகாதாரத் துறை அமைச்சர் சஜித் ஜாவித் தங்கள் பதவியை நேற்று திடீரென ராஜினாமா செய்தனர். இதனால் போரிஸ் அதிர்ச்சி அடைந்தார். இருப்பினும், அடுத்த சில மணி நேரத்தில் நதீம் சஹாவியை புதிய நிதி அமைச்சராகவும், ஸ்டீவ் பார்க்லேயை சுகாதார அமைச்சராகவும் நியமித்தார். இந்த நியமனங்களை போரிஸ் செய்த அடுத்த சில மணி நேரத்தில், உயர்கல்வி அமைச்சர் வில் குயின்ஸ், பள்ளிக் கல்வி அமைச்சர் ராபின் வால்கர் ஆகியோர் பதவி விலகினர்.

மேலும், போக்குவரத்துதுறை அமைச்சரின் உதவியாளரும் எம்.பியுமான லாரா ட்ரோட்டும் பதவியை ராஜினாமா செய்தார். அமைச்சர்கள் தொடர்ந்து ராஜினாமா செய்து வருகின்றனர்



## உக்ரைனுக்கு ஆதரவாக போரிட்ட பிரேஸில் மொடல் அழகி உயிரிழப்பு

நேட்டோவில் இணைய எதிர்ப்பு தெரிவித்து உக்ரைன் மீது ரஷ்யா நடத்தி வரும் போர் 5வது மாதமாக தொடர்கிறது. உக்ரைனுக்கு ஆதரவாக பிரேஸில் நாட்டை சேர்ந்த துப்பாக்கி சுடும் பயிற்சி பெற்ற மொடல் அழகி தலிதா டோ வாலே (39), ரஷ்யாவுக்கு எதிராக போரிட்டு வந்தார். பல நாள்கள் அமைதியாக இருந்த ரஷ்யா, கடந்த மாதம் 30ம் திகதி உக்ரைன் தலைநகர் கீவ், வடகிழக்கு பகுதியில் உள்ள கார்கிவ் நகரத்தின் மீது மீண்டும் பயங்கர ஏவுகணை தாக்குதல் நடத்தியது. இதில், மொடல் அழகி தலிதா இறந்துள்ளார் என்று தற்போது தகவல்கள் வெளியாகி உள்ளன. தலிதாவைக் கண்டுபிடிக்க பதுங்கு குழிக்குச் சென்ற முன்னாள் பிரேஸில் ராணுவ வீரர் டக்ளஸ் புரிகோவும் உயிரிழந்தார்.

## பிஷப்களை தேர்வு செய்யும் குழுவில் இனி பெண்கள் இடம்பெறுவராம்



போப் பிரான்சிஸ், ராய்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில், வாடிகன் நிர்வாகத்தில் பெண்களுக்கு முக்கிய பொறுப்புகளை அளிக்க திட்ட மிடப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

பிஷப்களை தேர்வு செய்யும் குழுவில் தற்போது ஆண்கள் மட்டுமே இருக்கின்றனர் என குறிப்பிட்ட அவர், இக்குழுவில் பெண்களுக்கு வாய்ப்பளிக்க விரும்புவதாகத் தெரிவித்தார்.

விரைவில் இக்குழுவில் 2 பெண்கள் இடம்பெறுவார்கள் என்றும் இதன்மூலம் இந்த பாதையில் வழிகள் கொஞ்சம் திறக்கப்படுகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார். எனினும், இதற்கான முடிவு இன்னும் அதிகாரப்பூர்வமாக எடுக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். வாடிகனின் நிர்வாகத் துறைகளில் பெண்களுக்கு முக்கிய பங்கு அளிக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்த போப் பிரான்சிஸ், வாடிகனின் நீதி மற்றும் அமைதிக்கான துறையின் 2ம் நிலை தலைவராக சகோதரி அலீஸ்ஸாந்தரா ஸ்மெரில்லி கடந்த ஆண்டு தேர்வு செய்யப்பட்டார் எனவும் அவர் கூறியுள்ளார். வாடிகனில் கடந்த மாதம் அமுலுக்கு வந்த புதிய அரசியல் சாசனம் குறித்து விளக்கம் அளித்தார்.

## உளவு பார்த்தார் எனக் கூறி இங்கிலாந்து தூதரக அதிகாரி கைது



அமெரிக்கா, இங்கிலாந்து, ரஷ்யா, பிரான்ஸ், சீனா, ஜேர்மனி ஆகிய நாடுகளுடன் ஈரான் கடந்த 2015ம் ஆண்டு அணுசக்தி ஒப்பந்தம் செய்து கொண்டது. ஈரான் அணு உலைகளில் யுரேனியம் செறிவூட்டல் திறன், செறிவூட்டல் நிலை, கையிருப்பு ஆகியவற்றை கட்டுக்குள் வைக்கவும், நட்டான்ஸ் நகரைத் தவிர்த்து பிற இடங்களில் யுரேனியம் செறிவூட்டும் மையம் அமைப்பதை தடுக்கவும் இந்த ஒப்பந்தம் வகை செய்தது.

இது ஈரான் அணு ஆயுதத்தை தயாரிப்பதை தடுக்க வகை செய்கிறது. இதற்காக ஈரான் மீது மேற்கத்திய நாடுகள் விதித்த பொருளாதார தடைகள் படிப்படியாக விலக்கிக்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டது. அமெரிக்க அதிபராக ஒபாமா இருந்தபோது செய்துகொண்ட இந்த ஒப்பந்தத்தில் இருந்து, அடுத்து அதிபராக பொறுப்பேற்ற டொனால்ட் ட்ரம்ப் விலகினார். தற்போது அதிபர் ஜோ பைடன் மீண்டும் ஈரானை அணுசக்தி ஒப்பந்தத்தில் சேர்க்க முயற்சித்து வருகிறார். இதற்கான பேச்சு கட்டார் தலைநகர் டோஹாவில் நடந்துவந்தது. இதற்கிடையே ஈரான் தனது அணுசக்தி தளங்களில் சர்வதேச ஆய்வாளர்களின் கண்காணிப்பு கமராக்களை மூடிவிட்டது. தற்போது ஈரானிடம் அணு ஆயுதம் தயாரிக்கக்கூடிய அளவுக்கு செறிவூட்டப்பட்ட யுரேனியம் கையிருப்பாக உள்ளதாக தகவல்கள் வெளியாகின. டோஹா பேச்சு முடிவின்றி முடிந்ததற்காக ஈரானும், அமெரிக்காவும் ஒன்றையொன்று குற்றம் சாட்டின.

அணு உலைகளில் அணு ஆயுதம் தயாரிக்க ஈரான் முயற்சித்து வருவதாகவும், இதற்கான சோதனைகளை ஈரான் மேற்கொண்டு வருவதாகவும் தகவல் வெளியானது. இந்நிலையில், தடை செய்யப்பட்ட பகுதியில் இருந்து மண் மாதிரிகளை சேகரித்ததாகவும், உளவு வேலையில் ஈடுபட்டதாகவும் டெஹ்ரானில் செயல்பட்டு வரும் இங்கிலாந்து தூதரகத்தின் மூத்த அதிகாரி மற்றும் சில வெளிநாட்டினரை ஈரான் புரட்சிப் படையினர் கைதுசெய்தமை உலகளவில் பெரும்சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.




## பிரிட்டிஷ் ஏர்வேஸ் நிறுவனத்தின் 10,300 விமான சேவைகள் ரத்து

ஊழியர் பற்றாக்குறை உள்ளிட்ட காரணங்களால் பிரிட்டிஷ் ஏர்வேஸ் நிறுவனம் 10 ஆயிரத்து 300 விமான சேவைகளை ரத்து செய்தது.

கொரோனா சூழலுக்கு பின்னர் விமான போக்குவரத்து துறையில் தேவைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாலும், பணியாளர் குறைவு உள்ளிட்ட காரணங்களால் ஒக்ரோபர் இறுதி வரை பல்வேறு நாடுகளுக்கான பத்தாயிரத்து 300 விமான சேவைகளை தற்காலிகமாக நிறுத்துவதாக விமான நிறுவனம் அறிவித்துள்ளது.

## சாலையில் சென்ற டிரக் மீது பாய்ந்தது மின்னல்

அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் சாலையில் சென்று கொண்டிருந்த டிரக் மீது மின்னல் தாக்கும் காட்சிகள் வெளியாகியுள்ளன.

செயிண்ட் பீட்டர்ஸ்பர்க் பகுதியில் மழை பெய்து கொண்டிருந்த போது சாலையில் சென்ற டிரக் மீது திடீரென மின்னல் பாய்ந்தது. இந்தக் காட்சியை பின் தொடர்ந்து காரில் சென்ற பெண் படம் பிடித்துள்ளார்.

இந்த சம்பவத்தில் உயிர்சேதம் தவிர்க்கப்பட்ட நிலையில், மின்னல் தாக்கியதில் வாகனம் சேதமடைந்தது.



# மாநிலங்களவை உறுப்பினராக இசைஞானி நியமனம் தமிழக முதல்வர் ஸ்டாலின் வாழ்த்துத் தெரிவிப்பு




கலை, அறிவியல், இலக்கியம், விளையாட்டு, சட்டம், சமூக சேவை உள்ளிட்ட துறைகளில் சிறப்பான பங்களிப்பை வழங்கியவர்களுக்கு மாநிலங்களவையின் நியமன எம்.பி. பதவியை வழங்கி இந்திய மத்திய அரசு கௌரவிப்பது வழைமை. தற்போது சுப்ரீம் கோர்ட்டின் முன்னாள் தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய், ராகேஷ் சின்கா உள்பட ஐவர் இவ்வாறு நியமன எம்.பிக்களாக உள்ளனர்.

காலியாக உள்ள இடங்களுக்கு எம்.பிக்களை நியமனம் செய்யும் நடவடிக்கையாக, இசைஞானி இளையராஜாவை மாநிலங்களவை எம்.பியாக இந்திய மத்திய அரசு நியமித்துள்ளது. இசைத்துறையில் அவர் செய்துள்ள சாதனைகளை அங்கீகரித்து கௌரவிக்கும் விதமாக இந்தப் பதவி வழங்கப்பட்டுள்ளதாக அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இசைஞானி இளையராஜாவுக்கு மாநிலங்களவை நியமனப் பதவி கிடைத்துள்ளமைக்கு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தனது டுவிட்டர் தளத்தில் பதிவிட்டுள்ள அவர், இசையால் நம் உள்ளங்களையும் மாநிலங்களையும் ஆண்ட இசைஞானி இளையராஜா அவர்கள் நாடாளுமன்ற மாநிலங்களவையில் உறுப்பினராய்ச் சிறப்புறச் செயல்பட வாழ்த்துகள்!, என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

# உக்ரைன் விவகாரத்தில் இந்தியா சரியான திசையில் செல்வதாக வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் கருத்து



புதுடெல்லிப் பல்கலைக்கழகத்தில் நேற்று நடந்த நிகழ்ச்சியொன்றில் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் பங்கேற்றார். நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், உக்ரைன் உள்பட பல்வேறு விவகாரங்கள் குறித்துக்கருத்துக்களைப்பகிர்ந்துகொண்டார்.

தெற்காசியாவுக்கு இந்தியா மிகுந்த முக்கியத்துவம் கொடுத்துவருகிறது. இந்தப் பிராந்தியத்தின் ஒன்றிணைப்பையே அண்டை நாடுகளும் விரும்புகின்றன. உக்ரைன் விவகாரத்தில் நாம் சரியான பாதையில் சென்றுகொண்டிருக்கிறோம். இது மிகவும் சிக்கலான விவகாரம். தீங்கை அதிகரிக்கும் வகையிலான பகைமையைக் குறைக்கும் நடவடிக்கையில் ஈடுபடுவதுதான் இதில் மிகவும் முக்கியமான விடயமாகும்.

பேச்சு மற்றும் தூதரக ரீதியிலான நடவடிக்கைகளுக்குத் திரும்பி, பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பதை ஊக்குவிக்க வேண்டும். இதுதான் உக்ரைன் விவகாரத்தில் இந்தியாவின் நிலைப்பாடு. உக்ரைன் போரில் இருந்து மிகப்பெரிய பிரச்சினைகள் உருவெடுத்துள்ளன. எரிபொருள், உணவு, உரத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்தியா அதன் சொந்த நலனில் முக்கியத்துவம் கொண்டுள்ளது. எனது மக்களின் நலனுக்கு பொறுப்பான ஒருவராக, அவர்களின் நலனை உறுதிப்படுத்த நான் செய்ய வேண்டியதை செய்ய வேண்டும், என்று அமைச்சர் ஜெய்சங்கர் தனது உரையில் குறிப்பிட்டிருக்கிறார்.



# மெட்ரோ ரயில் பயனிகளுக்கு இன்று முதல் முகக்கவசம் கட்டாயம்

தமிழகத்தில் கடந்த சில நாள்களாக கொரோனாப் பாதிப்பு சடுதியாக அதிகரித்து மக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தி வருகிறது. கொரோனாத் தொற்றுப் பரவல் தொடர்ந்து அதிகரித்ததால், அதனைக் கட்டுப்படுத்தும் விதமாக தமிழக அரசு மீண்டும் சில கட்டுப்பாடுகளை விதித்து வருகின்றது.

தமிழகம் முழுவதும் முகக்கவசம் அணிவது கட்டாயம் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது. பொது இடங்களில் முகக்கவசம் அணியாவிட்டால் அபராதம் விதிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் மெட்ரோ ரயில் பயணிகளும் முகக்கவசம் அணிந்துகொள்வது கட்டாயம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. மெட்ரோ ரயில் நிலையத்துக்கு வருவோர் அனைவரும் இன்று முதல் முகக் கவசம் அணிவது அவசியமென மெட்ரோ நிர்வாகம் தெரிவித்துள்ளது.



# ஜம்மு காஷ்மீரில் 10 வயதுச் சிறுவன் கொடூரக் கொலை நால்வரைக் கைது செய்து பொலிஸார் விசாரணை

ஜம்மு காஷ்மீரில் உள்ள சைத்பூர் கிராமத்தில் ப்ரணே குமார் என்ற 10 வயதுச் சிறுவன், பிரத்தியேக வகுப்புக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பாதமையால் பொலஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதையடுத்து மேற்கொள்ளப்பட்ட நீண்ட நேரத் தேடுதலுக்குப் பின்னர் நள்ளிரவில் சிறுவனின் உடல் சாக்கு மூடையில் கண்டெடுக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிறுவனின் வாயை டேப்பினால் மூடி, கைகால்களைக் கட்டிய நிலையில் கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டுள்ளார் என மூத்த காவல் துறைக் கண்காணிப்பாளர் ஆர்.சி.கோட்வால் தெரிவித்திருக்கிறார்.

சிறுவனின் உடலில் காயங்கள் இருந்தன என்றும், மரணத்திற்கான சரியான காரணம் பிரேத பரிசோதனை அறிக்கை கிடைத்த பின்னரே தெரியவரும் என்றும் குறித்த அதிகாரி கூறியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக 3 சிறுவர்கள் உள்பட நான்கு பேரைக் கைது செய்துள்ளோம் என தெரிவித்த அவர், இந்தச் சம்பவம் குறித்து முழுமையாக விசாரிக்கப்பட்ட பின்னர் தகவல் வழங்கப்படும் என்றும் தெரிவித்தார்.



# டெல்லி அரசாங்கப் பாடசாலைகளில் கண்காணிப்பு கமராக்கள் பொருத்தல்

டெல்லியில் உள்ள அரசாங்கப் பாடசாலைகளில் சி.சி.ரி.வி. கண்காணிப்புக் கமராக்கள் பொருத்தப்படும் என கடந்த 2019 ஆம் ஆண்டு அரசாங்கம் அறிவிப்பு வெளியிட்டிருந்தது. இந்தத் திட்டத்தினை தற்போது அரசாங்கத்தின் பொதுப்பணித்துறை முன்னெடுத்து வருகிறது.

டெல்லியில் புதிதாகப் பல பாடசாலைகளையும், ஏற்கனவே உள்ள பாடசாலைகளுக்குத் தேவைப்படும் வகுப்பறைகளையும் அமைக்கும் பணியை பொதுப்பணித்துறை மேற்கொண்டு வருகிறது. வகுப்பறைகளில் கண்காணிப்புக் கமராக்களைப் பொருத்தும் திட்டமும் முன்னெடுக்கப்படுகிறது.

வகுப்பறையின் நேரடிக் காட்சிகளை பெற்றோர் தங்கள் வீடுகளில் இருந்தபடியே கைப்பேசிகள் மற்றும் கணினிகள் வழியாகப் பார்க்கும் வசதி ஏற்படுத்தப்படும். இந்த நடவடிக்கை, மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதோடு கற்பித்தல் முறையில் வெளிப்படைத்தன்மையையும் உறுதி செய்வதை நோக்கமாக கொண்டுள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம் தங்கள் குழந்தைகள் என்ன படிக்கிறார்கள் என்பதை பெற்றோர் அறிந்து கொள்ள முடியும்.

இதற்காக பெற்றோர்களுக்கு தனிப்பட்ட இணைவுப் பெயரும் அதற்கான கடவுச்சொல்லுடன் கூடிய உள்நுழைவு சான்றுகளும் வழங்கப்படும். இதற்கான ஒப்புதல் பெற்றோரிடமிருந்து பெறப்படும். மாணவர்களின் பெற்றோர் மற்றும் பாதுகாவலர்களிடமிருந்து ஒப்புதலைப் பெற்ற பின்னர், பாடசாலையின் தலைமையாசிரியர்கள் மாணவர்களின் விவரங்களை பொதுப்பணித்துறைக்குச் சமர்ப்பிக்க வேண்டும். அதன்பின்னர் தகவல்கள் மென்பொருளில் பதிவேற்றப்படும் என, இந்தத் திட்டப் பணியில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# மட்டக்களப்பு மாநகரப் பகுதிக்குள் உள்ளகக் குறுந்தூர பஸ் சேவைகள்

## நெருக்கடியைச் சமாளிக்க மேயரின் புதுமைத் திட்டம் கைப்பேசியில் சேவையைக் கண்காணிப்பதற்கும் வசதி




நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாட்டைத் தொடர்ந்து அன்றாட போக்குவரத்து செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாது சிரமங்களை எதிர்நோக்கிவரும் பொது மக்களின் நன்மை கருதி மட்டக்களப்பு மாநகர சபையின் நிர்வாக எல்லைக்குள் தற்காலிகமாக குறுந்தூர பஸ் (City Shuttle Service) சேவை தனியார் பங்களிப்புடன் முன்னெடுக்கப்படவுள்ளதாக மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் தெரிவித்துள்ளார்.

இவ் விடயம் சம்பந்தமாக நேற்றைய தினம் இடம்பெற்றகலந்துரையாடலைஅடுத்துஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இத்தகவலை வெளியிட்டார். இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர் –

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் தொடர்ச்சியான எரிபொருள் விலையேற்றம் போன்ற காரணங்களால் மாநகர சபையின் நிர்வாக எல்லைக்குள் வசிக்கும் மக்கள் தமது போக்குவரத்துச் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாத வகையில் பல இன்னல்களை அனுபவித்து வருகின்றனர். குறிப்பாக, ஓட்டோ உள்ளிட்ட பிரயாண சேவைகளை முன்னெடுப்பதற்குக் கூட எரிபொருள் தட்டுப்பாடு நிலவுவதால், மிகக் குறைந்தளவிலான வாகனங்களே சேவையில் ஈடுபட்டு வருகின்றன. அவற்றின் வாடகைக் கட்டணங்களும் சடுதியாக அதிகரித்துள்ளமையையும் அவதானிக்க முடிகின்றது.

இதன் காரணமாக உள்ளகப் போக்குவரத்துச் சேவைகள் அனைத்தும் தடைப்பட்டுள்ளன.நோயாளர்கள், மாணவர்கள், அரச தனியார் அலுவலகங்களின் பணியாளர்கள், தினக்கூலித் தொழிலாளர்கள் எனப் பலர் தமது போக்குவரத்து நெருக்கடியினால் பல்வேறு இன்னல்களை அனுபவித்து வருகின்றனர்.

இதனைக் கருத்திற்கொண்டு திரு.லியோன் லோறன்ஸ் எனும் தனிநபரின் ஊடாக குறித்த குறுந்தூர பஸ் (City Shuttle Service) சேவையைத் தற்காலிகமாக முன்னெடுப்பதற்கான ஒழுங்குகள் எம்மால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதற்கான போக்குவரத்து ஒழுங்கு பத்திர அனுமதிக்காக கிழக்கு மாகாண வீதிப் பயணிகள் அதிகார சபைக்கு விண்ணப்பித்துள்ளோம். அவ் அனுமதி கிடைக்கப்பெறும் பட்சத்தில் மிகக் குறைந்த கட்டணத்தில் இச் சேவையினை விரைவில் ஆரம்பிக்க முடியும் எனவும் தெரிவித்தார்.

அத்துடன் மேற்படி சேவைக்கான ஒருவழிக் கட்டணமான பொதுமகன் ஒருவருக்கு 50 ரூபாயும், பாடசாலை மாணவர்களுக்கு ரூபா 40 ரூபாயும் அறவிடப்படும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது. இச் சேவையை நவீன தகவல் தொழில்நுட்பத்தின் துணையுடன் பொது மக்கள் தமது கையடக்க தொலைபேசியின் ஊடாகக் கண்காணித்துக் கொள்ளும் வசதிகளும் நிறுவப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



# மட்டு. கோப்பாவெளியில் காட்டு யானை அட்டகாசம்

மட்டக்களப்பு–பதுளை வீதியை அண்டியுள்ள கோப்பாவெளி எனும் கிராமத்துக்குள் கடந்த சனிக்கிழமை நள்ளிரவில் புகுந்த காட்டு யானையால் சத்தியநாதன் என்பவரின் வீடு சேதமாக்கப்பட்டுள்ளது.

நள்ளிரவில் திடீரெனப் புகுந்த காட்டு யானையால் வீடு உடமைகள் சேதமாக்கப்பட்டன. நாம் தெய்வாதீனமாக உயிர் தப்பினோம். ஆயினும், இது பற்றி அதிகாரிகளுக்கு அறிவித்தும் எவரும் வந்து பார்வையிடவில்லை" – என பாதிக்கப்பட்ட குடும்பஸ்தரான நாகலிங்கம் சத்தியநாதன் தெரிவித்தார்.

சம்பவம் நடந்து பல நாள்கள் கடந்துவிட்ட போதிலும் பொலிஸாரோ, வன ஜீவராசி அலுவலர்களோ, பிரதேச செயலக அதிகாரிகளோ எவரும் வந்து பார்வையிடவில்லை என்றும் அவர் தெரிவிக்கிறார். இதற்கு தற்போதைய எரிபொருள் நெருக்கடியே காரணம் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இச்சம்பவம் இடம்பெற்றபோது தமது குடும்பம் காட்டு யானையின் தாக்குதலில் இருந்து காப்பாற்றிக் கொள்ள கூக்குரலிட்டது எனவும், விரைந்து வந்த அயலவர்களின் உதவியுடன் தெய்வாதீனமாக உயிர் தப்பிப் பிழைத்தோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கோப்பாவெளி, கித்துள், பெரியபுல்லுமலை கிராமங்களில் தற்போது காட்டு யானைகள் ஊடுருவல் வழமையான ஒரு நிகழ்வாக மாறிவிட்டிருப்பதாக கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த 26ஆம் திகதி கித்துள் பிரதேசத்தில் மாட்டுப் பண்ணை உள்ள இடத்துக்குச் சென்ற கூலித் தொழிலாளி ஒருவர் மீது காட்டு யானை தாக்கியதில் அவர் ஒரு காலை இழந்துள்ளார்.

# சுவிஸ் உதயம் அமைப்புக்கு திராய்மடுவில் தலைமையகம்

## அடிக்கல் நடும் நிகழ்வு நடந்தேறியது





(க.கிருபாகரன்)

கிழக்கு மாகாணத்தில் வாழ்வாதார மேம்பாடு மற்றும் கல்வி நடவடிக்கைகளுக்கான உதவிகளை வழங்கிவரும் சுவிஸ்–உதயம் அமைப்பின் தலைமைக் காரியாலயம் மட்டக்களப்பு திராய்மடு பணிச்சையடியில் அமைக்கப்படவுள்ளது. இதனை அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

சுவிஸ் உதயம் அமைப்பின் கிழக்கு மாகாணத் தலைவர் ஓய்வு நிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் மு.விமலநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்குப் பிரதம அதிதிகளாக மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் மற்றும் சுவிஸ் உதயம் தாய்ச் சங்கத்தின் செயலாளர் அம்பலவாணர் ராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அத்தோடு அமைப்பின் கிழக்கு மாகாணச் செயலாளர் ரொமிலா செங்கமலன், பிரதித் தலைவர் ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் க.வரதராஜன், பொருளாளர் பாவணர் அக்கரைப்பாக்கியன் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

# ஆஸ்பத்திரி அத்தியாவசிய சேவைக்கு மட்டு நகரில் எரிபொருள் விநியோகம்

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அத்தியாவசிய தேவைக்கான சேவையில் ஈடுபடும் வாகனங்களுக்கு முன்னுரிமை வழங்கும் வகையில், மட்டக்களப்பு ஐ.ஓ.சி. எரிபொருள் நிலையம் ஊடாக நேற்று டீசல் விநியோகிக்கப்பட்டதாக மட்டக்களப்பு வர்த்தக சங்கத்தின் தலைவரும் மட்டக்களப்பு ஐ.ஓ.சி.எரிபொருள் நிரப்பு நிலையத்தின் உரிமையாளருமான முத்துக்குமார் செல்வராசா தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட மக்களின் சுகாதார மருத்துவ பாதுகாப்பு நலன் கருதி, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அத்தியாவசிய தேவைகளுக்கான சேவையில் ஈடுபடும் வாகனங்களுக்கு எரிபொருள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை அம்புலன்ஸ் மற்றும் மருந்துப் பொருள்களைக் கொண்டு செல்லும் வாகனங்கள் போன்ற அத்தியாவசிய வாகனங்களுக்கு இவ்வாறு எரிபொருள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

இதன்போது எரிபொருளைப்பெற்றுக்கொள்ள வீதிகளில் காத்திருந்த வாகன சாரதிகளும் தமது ஒத்துழைப்புக்களை வழங்கினர் எனவும் மட்டக்களப்பு ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்தின் உரிமையாளர் மேலும் தெரிவித்தார்.



# கோட்டா பதவி விலகினால் மாத்திரமே சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு கிட்டும்!



## ராஜித திட்டவட்டம்

ஜூலை 9 ஆம் திகதி முதல் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபடுவோம். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகினால் மாத்திரமே சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியும்.

மக்களின் பிரச்சினை மற்றும் வலியுறுத்தல் தொடர்பில் ஜனாதிபதிக்குத் தெளிவில்லை. நாட்டின் சுகாதாரக் கட்டமைப்பு முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

அரச வைத்தியசாலைகளில் மருந்து இல்லை, தனியார் வைத்தியசாலைக்கு சென்றால் மருத்து கட்டணத்தை பார்த்து மனநிலை பாதிக்கப்படும் நிலைமை தற்போது தோற்றம் பெற்றுள்ளது என முன்னாள் சுகாதாரத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன சபையில் தெரிவித்தார்.

சபாநாயகர் தலைமையில் நாடாளுமன்றம் கூடிய போது ஒத்திவைப்பு விவாதத்தை தொடர்ந்து கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

ஜனாதிபதி உட்பட பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தின் தவறான நிர்வாகத்தால் எரிபொருள் விநியோகக் கட்டமைப்பு முழுமையாகப் பாதிக்கப்பட்டு கல்வி, சுகாதாரம் மற்றும் போக்குவரத்து உள்ளிட்ட அடிப்படைத் துறைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

எரிபொருள் நெருக்கடியால் நடுத்தர மக்கள் தொழிற்துறையை இழந்துள்ள நிலையில், எதிர்வரும் காலங்களில் தொழிலின்மை வீதம் அதிகரிக்கக் கூடும்.

சமூக கட்டமைப்பில் தோற்றம் பெற்றுள்ள அடிப்படைப் பிரச்சினைகளுக்கு அரசாங்கத்திடம் குறுகிய மற்றும் நீண்டகாலத் திட்டம் ஏதும் கிடையாது.

எரிபொருள் கப்பல் வரும் என வலுசக்தி அமைச்சர் சபையில் குறிப்பிடுகிறார். ஆனால் எரிபொருள் கப்பல் வருவதில்லை, எரிபொருளுக்கான வரிசை நீண்டு, பதிவாகும் மரணங்களின் எண்ணிக்கை அதிகரித்து செல்கிறது.

அத்தியாவசியப் பொருள்களுக்கு எவ்வித தட்டுப்பாடும் ஏற்படாது, தேவையான உணவுப் பொருள்கள் கையிருப்பில் உள்ளன என வர்த்தகத்துறை அமைச்சர் சபையில் குறிப்பிடுகிறார்.

ஆனால் சந்தையிலும், கடைகளிலும் பொருள்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. எதிர்வரும் காலங்களில் உணவு தட்டுப்பாட்டை எதிர்கொள்ள வேண்டிய தன்மையே காணப்படுகிறது.

சிறந்த முறையில் காணப்பட்ட இலங்கையின் சுகாதாரத்துறை அச்சுறுத்தல் நிலைக்கு செல்கிறது என யுனிசெவ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் யுனிசெவ் நிறுவனத்தின் மதிப்பீட்டின் படி மொத்த சனத்தொகையில் 22 சதவீதமானோர் உணவு பெறலை தவிர்த்துள்ளதுடன், 86 சதவீதமானோர் உணவு உட்கொள்ளும் வேளையைத் தவிர்த்துள்ளார்கள்.

மொத்த சனத்தொகையில் 58 சதவீதமானோருக்கு மனிதாபிமான அடிப்படையில் நிவாரணம் வழங்கப்பட வேண்டும், அத்துடன் 17 சதவீதமானோர் அவதான நிலையில் உள்ளமையுடன், இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாவிடின் பாரிய நெருக்கடியை எதிர்கொள்ள நேரிடும்.

2022 ஆம் ஆண்டு பெரும்போக விவசாயம் 50 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளதைத் தொடர்ந்து 17 லட்சம் சிறுவர்கள் மந்த போசணை நிலையை அடைந்துள்ளார்கள்.

தனியார் வைத்தியசாலைகள் எவ்வித கண்காணிப்பற்ற வகையில் செயற்படுகின்றன. தனியார் வைத்தியசாலையில் மூளை சம்பந்தமான சத்திரசிகிச்சைக்கு 112 லட்சம் கட்டணம் அறவிடப்படுகின்றது.

அரச வைத்தியசாலைகளில் மருந்து தட்டுப்பாடு நிலவுகிறது, தனியார் வைத்தியசாலைக்கு சென்றால் கட்டணத்தை பார்த்து மனநிலை பாதிக்கும் நிலை காணப்படுகிறது.

நாடு பாரதுரமான நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளதை ஜனாதிபதி அறியவில்லை. மக்கள் படும் துன்பம் தொடர்பில் ஜனாதிபதிக்கு எவ்வித அக்கறையும் கிடையாது.

அவர் பதுங்கு குழியில் உள்ளார். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி வகிப்பதற்கு தகுதியற்றவர் என மத தலைவர்கள் உட்பட, முழு நாடும் வலியுறுத்தும் போது அவர் பொறுப்பற்ற வகையில் உள்ளார்.

அரசாங்கத்துக்கு எதிராக பல்லாயிரக்கணக்கான மக்கள் கொழும்பில் ஒன்று கூடவுள்ளார்கள்.

மக்கள் போராட்டத்தில் நாங்களும் ஒன்றிணைவோம். ஜனாதிபதி பதவிவிலகும் வரை போராட்டத்தில் ஈடுபடுவோம். – என்றார்.

# ரயில்வேப் பாதுகாப்புக்கு இராணுவத்தைவழங்குக!

## ரயில்வே நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கம் கோரிக்கை

ரயில் நிலைய பாதுகாப்புக்கு இராணுவத்தை வழங்குமாறு ரயில்வே நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கத்தின் தலைவர் சுமேத சோமரத்ன வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக தனியார் பஸ் சேவைகள் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளமையுடன், தனிப்பட்ட வாகனங்களில் பயணிப்பவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் இவர்கள் அனைவருமே ரயில் சேவையை நம்பியே தமது போக்குவரத்து தேவைகளை நிறைவேற்றி வருகின்றனர்.

இவ்வாறான சூழ்நிலையில் ரயில் கட்டுப்பாட்டாளர்களால் முன்னெடுக்கப்பட்ட பணிப்பகிஷ்கரிப்பு காரணமாக மக்கள் பலரும் பாரிய சிரமத்துக்கு உள்ளாகி இருந்தனர்.

இது தொடர்பாக ரயில்வே திணைக்களத்தின் பிரதிப் பொது முகாமையாளர் காமினி செனவிரத்ன கூறுகையில் –

ரயில் கட்டுப்பாட்டாளர்களினால் முன்னெடுக்கப்பட்ட பணிப் பகிஷ்கரிப்பு காரணமாக ரயில் போக்குவரத்து தடைப்பட்டது. மேலும், திட்டமிடப்பட்ட ரயில்களில் பாதியளவு ரயில்கள் இயங்கவில்லை என அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, ரயில் நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கத்தின் தலைவர் சுமேத சோமரத்ன கூறுகையில் –

குறைந்த எண்ணிக்கையிலான ரயில்களே சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றமையால் ஆத்திரமடைந்த பயணிகள் ரயில் நிலையங்களுக்கு முன்னாள் கலவரத்தில் ஈடுபட்ட சம்பவங்கள் பதிவாகின.

இதனால் அச்சமடைந்த ரயில் நிலைய பொறுப்பதிகாரிகள் கடமைகளை மேற்கொள்ளத் தயங்கி வருகின்றமையுடன், தமக்கு தகுந்த பாதுகாப்பு வழங்குமாறும் கேட்டுள்ளனர். – என்றார்.

கொழும்பு கோட்டை, மருதானை, றாகம, கொள்ளுப்பிட்டி மற்றும் பாணந்துறை ஆகிய ரயில் நிலைய பொறுப்பதிகாரிகள் தமது கடமைகளை விட்டுச் சென்றுள்ளனர் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

# தென்னை மரத்திலிருந்து தவறி வீழ்ந்து பருத்தித்துறையில் முதியவர் உயிரிழப்பு!

தென்னைமரத்திலிருந்து தவறி வீழ்ந்த முதியவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

பருத்தித்துறை புலோலி மத்தியைச் சேர்ந்த ஆறுமுகம் நவரட்ணம் (வயது-65) என்ற 5 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த ஜூலை மாதம் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை தென்னைமரத்துக்கு ஏணி வைத்து ஏறிய போது, தவறி வீழ்ந்துள்ளார்.

முதியவர் உடனடியாக மந்திகை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். எனினும் சிகிச்சை பயனின்றி நேற்று (புதன்கிழமை) அவர் உயிழந்தார்.

# புகையற்ற புதிய வகை அடுப்பு மட்டுசெயலகத்தில்செய்முறை







(க.கிருபாகரன்)

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் சமுர்த்திப் பிரிவில் கடமையாற்றும் தவராசா சுரேஷினால் புகையற்ற புதியவகை அடுப்பொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த அடுப்பை நேற்று முன்தினம் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் அவர் அறிமுகம் செய்து வைத்தார்.

திரவ அல்லது வாயு எரிபொருள் தட்டுப்பாடு நிலவி வரும் இக்காலகட்டத்தில், அவை இல்லாமல் பயன்படுத்தக் கூடிய புதிய வகை அடுப்பை மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரனுக்கு அறிமுகம் செய்தமையுடன், அதன் செயல்திறன் தொடர்பாகவும் விரிவாக எடுத்துக் கூறினார். மின்சாரம் துண்டிக்கப்படும் நேரத்தில் கூட, இதனை பயன்படுத்தக் கூடியதாக அமைக் கப்பட்டுள்ளமை இதன் சிறப்பம்சமாகும்.

எரிபொருள் மற்றும் எரிவாயுவினைப் பெற்றுக் கொள்வதில் பாரிய சிரமத்தினை எதிர்கொண்டுள்ள இக் காலகட்டத்தில் புதிய – புகையற்ற – அடுப்பைப் பாவிப்பதன் மூலம் பணத்தை மீதப்படுத்த முடியும் என இதன்போது கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

இச்செய்முறையின் போது மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சினி ஸ்ரீகாந்த், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி சசிகலா புண்ணியமூர்த்தி, மண்முனை வடக்குப் பிரதேச செயலாளர் வீ.வாசுதேவன் மற்றும் மாவட்ட நிர்வாக உத்தியோகத்தர் மா.தயாபரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.07.2022இல் வெளியிடப்பெற்றது.